உ

முருகர் துணை.

சுப்பிரமணிய ராட்டகம்.

சென்னை - சூளை

ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

33

உ

முருகர் துணை.

சுப்பிரமணிய ராட்டகம்.

காப்பு-வெண்பா.

பார்புகழுஞ்சுப்பிர மணியர்மேலாட்டகத்தை
தார்கொண்டுபூசைசெய்து சாற்றுகைக்கு-கார்மேகன்
மாமருகோனுன மதகரியைங்கரன்பாதம்
மாமருவாய்க்கொள்வேன் முடி.

ஆறுமாமுகன்றன்னையே சதாகாலமும்
பணிந் தேத்தினேன்
பாருள்ளோர்க் கதிதந்திடுஞ்சிவ
புத்திராவனைப் பாடினேன்
வீறுகொண்டென்னை காக்கவந்திட்ட
சூரனைக் கொன்றவீரனே
பாருமும்முடைய யாறுமாமுகக்
கண்ணுள்ளோர் சிறுகண்ணிலே. க

ஆதிகாலத்தின்மலையாளத்திற் சிறைகொண்
டேகிய குமரனே
ஆதிகாலத்தி நற்கீரனுக்காக்குறும்
போரைத்துளைத்த சிலம்பனே
பாதியாயறு முயர்ப்பிராணிகட்
குயிர்கொடுத்திடும் புலவனே
பாதிமாமதி சூடுமீசர்தன்
பாலகா மயில்வாகனா. ௨

சிங்கமாமுக சூரனைக்கொன்ற
வீரனேமிகப் போற்றினேன்
வங்கமானதை வெட்டையாக்கிட
வருள்புரிந்திடு சாமிநீ
தங்கமாக்கிடுஞ் சூதைநீயெனக்
காண்பிவித்திடு மரசனே
பங்கமாகாமற் கல்விநீயெனக்
காண்பிவித்திடு புலவனே. ௩

புவியிலோர்புரங் கோவில்செய்ததில்
குடியிருந்து கொண்டிருக்குநீர்

பாவியாகிய வெந்தன்பாவத்தை
பார்த்துநீ பரிக்ஷிக்கவே
பூவில்மேவிய போதனைச்சிறை
யாக்கினக் கடுஞ்சூரனே
மாவிலேமிகப் பிரீதியாயுள்ள
வள்ளியின் மணவாளனே. ச

கோவிலோர்புரம் கோயிலேநீயுங்
கோதையருடன் கூடியே
காவிலேயிருப்பது போன்மிக
நேர்த்தியா யிருப்பதினால்
பூவிலேயெனக் கோதைமாமனஞ்
செய்துவைக்கவே போற்றினேன்
கோவிலேயுள்ளக் கானகமதிற்
கூவிநின்றாடும் வாகனா. ரு

கோவிலோர டிமைக்குவாகவே
வைத்தியஞ் செய்தநாதனே
பூவிலேயெனக் கூடியமட்டில்
வைத்தியஞ்சேயப் போதியும்

பாவிலேயென்ன மாசுவந்தாலுன்
பாதமேகதி யாதலால்
நாவிலேயெழுத் துள்ளோனுக்கிய
நன்மையாகிய புலவனே. சு

பூவிலோர் டுமெக்காகவே
சோதிடம்பார்த்த புலவனே
கோவிலேயெனக் கூடியமட்டிலே
சோதிடம்பார்க்க போதியும்
பாவினுலுந்தன் பாதத்தைசேர
பார்த்துநான் கேட்டுக்கொள்ளுறேன்
பூவிலேயுள்ள கானகமதில்
கூவிநின்றுடும் வாகனு. எ

பேதையுமதி பித்தமுங்கொண்ட
வித்தக னருட்புத்திரா
பாதையுமதி யுத்தியுந்தெரியாத
நானுனைப் போற்றினேன்

போதையாங்கோவி லின்றுநீயெனைக்
கார்ப்பையென்று நானம்பினேன்
கோதைசாயலன் போலுமாமந்தக்
கோழி மயில்வாகனை. அ

சுப்பிரமணியரடிகளே சரணம்.

சுப்பிரமணிய ராட்டகம்.

முற்றிற்று.